வடபழனி, திருமங்கலம்

# மெட்ரோ ரயில் நிலையத்தில் பன்னடுக்கு வாகன நிறுத்தம்

## வாகன நெரிசலை தவிர்க்க திட்டம்



சென்னை, மே 22: வடபழனி, திருமங்கலம் ஆகிய 2 மெட்ரோ ரயில் நிலையங்களில் பன்னடுக்கு வாகன நிறுத்தம் அமைய உள்ளது.

சென்னையில் 32 மெட்ரோ ரயில் நிலையங்கள் உள்ளன. இதில் வடபழனி மற்றும் திருமங்கலம் ஆகிய 2 மெட்ரோ ரயில் நிலையங்களில் வாகனத்தை நிறுத்த போதிய இடம் இல்லாததால் பெரும்பாலானோர் அருகில் உள்ள இடங்களில் வாகனத்தை நிறுத்தும் நிலை காணப்பட்டது. இந்நிலையில், வருவாயை அதிகரிக்கவும், வாகன நெரிசலை தவிர்க்கவும் வடபழனி மற்றும் திருமங்கலம் ஆகிய 2 மெட்ரோ ரயில் நிலையங்களில் பன்னடுக்கு வாகன நிறுத்தகம் அமைக்க நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாக மெட்ரோ ரயில் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது: இட நெருக்கடி காரணமாக சில மெட்ரோ ரயில் நிலையங்களில் வாகன நிறுத்தம் அமைக்க முடியவில்லை. இதுகுறித்து பயணிகள் தரப்பில் இருந்து புகார்கள் வந்தவண்ணம் இருந்தது. எனவே, இப்பிரச்னையை கவனத்தில் கொண்டு முதல் கட்டமாக வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் பன்னடுக்கு வாகன நிறுத்தகத்தை அமைக்க நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. அதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. இதற்கு அடுத்தபடியாக திருமங்கலம் மெட்ரோ ரயில் நிலையத்தில் பன்னடுக்கு வாகன நிறுத்தகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பன்னடுக்கு வாகன நிறுத்தத்திற்கும் பழைய கட்டணம் தான் இருக்கும். 100 முதல் 150 வரையிலான கார் மற்றும் இருசக்கர வாகனங்களை நிறுத்துவதற்கு ஏற்றார் போல் இது அமைக்கப்பட உள்ளது.

இவ்வாறு கூறினார்.